செ.வெ.எண் : 02/ ஏப்ரல் நாள் : 02.04.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இன்று (02.04.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல்-2019ஐ முன்னிட்டு, 100 சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இன்றைய தினம் அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயிலும் மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள், வாக்குரிமை என்பது வலிமையான ஜனநாயகத்தினை உருவாக்கிட ஏதுவாக குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்பதனை வலியுறுத்தும் விதமாக "VOTE-**V**aluable **O**ption **T**unes **E**verything" என்ற விழிப்புணர்வு வாசகம் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர். அதேபோல, வாக்குப்பதிவின்போது எந்தவொரு தூண்டுதலுக்கும் ஆட்படாமல் நேர்மையாகவும், கண்ணியமாகவும் வாக்களிப்போம் என்பதை வலியுறுத்தும் விதமாக "என் வாக்கு விற்பனைக்கு அல்ல", "MY VOTE NOT FOR SALE" ஆகிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசு செவிலியர் பயிற்சி மாணவியர்கள் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதன்பின்பு, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் (EVM & VVPAT) ஆகியவற்றின் செயல்பாடு குறித்து விளக்கம் அளித்து விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்சி லீமா அமலினி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் மரு.ஆர்.சுமன், மருத்துவப்பணிகள் இணை இயக்குநர் (பொ) மரு.ஏ.சகாயஸ்டீபன்ராஜ், அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஜவஹர்லால், இராமநாதபுரம் வட்டாட்சியர் திருமதி.முத்துலெட்சுமி உட்பட அரசு அலுவலர்கள், அரசு செவிலியர் பயிற்சி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**